Registered as a News Paper in Sri Lanka

பகங்கள் 04

விலை ரூபா: 3-50

கண்டுக்குளி கிளை நூலகம்

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத வூ ஆனி மீ 24 ஆம் உ ஞாயிற்றுக்கிழமை (08 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 14 ஓசை 140

## 'ஏமாற்றுவது எப்படிஎன்று புலிகளுக்கு படிப்பிப்போம்'

-ரஞ்சன் விஜேரத்தினா

(கொழும்பு)

''ஜே. வி. பியினர் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வராமலேயே மோதினார்கள். அவர்கள் இப்பொழுது மேலுலகத்தில் இருக்கிறார்கள். விடுதலைப்புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டே எங்களை ஏமாற்ற முனைந்தார்கள்; அவர்களுக்கு ஏமாற்றவும் சரியாகத் தெரியாது. ஏமாற்றுவது எப்படி என்பதை அவர்களுக்கு நாங்கள் சொல்லிக் கொடுப்போம்.'' சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் (4 ஆம் பக்கம் பார்க்க)

# மின்சார இழையில் ஐக்கிய இலங்கை!

## இதர தொடர்புகள் யாவும் துண்டிப்பு; பிரிவதைத் தடுக்க தமிழர் பணயமா?

(யாழ்ப்பாணம்)

இன்னும் ஓரிரு வாரங்களில் வடக்கு - கிழக்கில் பொருள் புழக்கம் மாத்திரமன்றி பணப்புழக்கமும் ஸ்தம்பித்துவிடும் என்று வர்த்தக, கூட்டுறவு வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. இதேவேளையில் தமிழ் பகுதிகளுக்கு சகல விநியோகங்களையும், தொடர்புகளையும் நிறுத்திக் கொள்வதிலிருந்து ஸ்ரீலங்கா அரசே நாட்டைப்பிரித்து வைக்கும் செயலில் இறங்கியுள்ளது என்று அரசியல் அவதானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஐக்கிய இலங்கையானது மின்சார விநியோகம் என்னும் ஒரே ஒரு நூலிழையில் தான் தொங்கிக்கொண்டிருக்கிறது. அதாவது தெற்குக்கும் வடக்குக்கும் இடையிலான ஒரே ஒருதொடர்பு தற்போது மின்சார விநியோகம் தான். வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான ஏனைய அனைத்துத் தொடர்புகளையும், விநியோகங்களையும் அரசு துண்டித்து விட்டது.

### தமிழர்கள் பணயக் கைதிகளா?

வடக்கே செல்ல அவதிப்படும் தமிழ்மக்களை இங்கே வர அனுமதிக்காது தடுத்து வைத்திருப்பது இவர்களை பணயக்கைதிகளாகப் பயன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் மீதான தாக்குதலுக்கு பல்கலை. மா. அவை கண்டனம்

தமிழ் பகுதிகளில் போர் விமானங்களாலும் ஹெலி கொப்டர்களாலும் நடாத்தப்படும் தொடர் குண்டு வீச்சுக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதிகரிக்கும் பதற்றமும் வன் முறையும் நிலைமையைமேலும் சீர்குலைப்பதோடு, பொது மக்களின் மனதில் தம் நிலைபற்றிய பீதியை வலுவடையச் செய்கின்றன என நேற்று பல்க

## கந்தளாயில் ஜிகாத்தால் 12 முஸ்லிம்கள் கோலை

(கந்தளாய்)

கடந்த திங்கட்கிழமை கந்த

கொலை செய்யப்பட்ட பன்னி

## மீட்பு நிதிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி பொதுக் கூட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் வடக்கு பரஞ்சோதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுகின்றன.

காலையிலும் மாலையிலும் நடைபெறும் இக்கூட்டங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியை சேர்ந்த பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

## முதலுதவிப் பயிற்சி

(முல்லைத்தீவு)

முள்ளியவளை, செம்மலை ஆகிய இரு கிராமங்களிலும் முல்லைத்தீவுப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கான முதலுதவிப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

வட்ட அவை உறுப்பினர் உதவியுடன் யாழ். செஞ்சிலுவைச்சங்க வைத்திய உள்ளூர் வைத்திய அதிகாரிகளும் இந்தப்பயிற்சிகளை நடாத்தி வருகின்றனர். (58)

## ஆலயத்தில் அகதிகள்

(கொழும்புத்துறை)

தெல்லிப்பளை அருள் மிகு துர்க்காதேவி ஆலயத்தில் வலி வடக்கைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்கள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளன. இக்குடும்பங்களது தேவைகளை தேவஸ்தான தலைவி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா-அப்பாக்குட்டி கவனித்து வருகின்றார். (24)

## குழந்தைகள் தாபரிப்பு நிதி

(உரும்பராய்)

# வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டது!

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டுவிட்டது. இந்த மாகாண சபைக்குப் புதிய தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா தேர்தல் ஆணையாளரைப் பணித்திருப்பதாக அரச அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

வடக்குக்கிழக்கு மாகாண சபை கடந்த பல மாதங்களாக செயற்படாமல் இருந்துவந்தது. இம் மாகாண சபை தானாகக்கலைந்து விட்டதா, கலைக்கப்படுமா? என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்திருந்தது.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட மசோதா ஜனாதிபதியின் ஒப்புதலுடன் சட்டமாகியதும் வடக்குக் கிழக்குமாகாணசபை நேற்றுக் கலைக்கப்பட்டது. இம் மாகாண சபைக்கான புதிய தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தேர்தல் ஆணையாளரை ஜனாதிபதி பிரேமதாசா சம்பிரதாயப்படி பணித்திருக்கிறார்.

இப்போதுள்ள சூழ்நிலையில் வடக்குக்கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்பு இல்லை எனவும் அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

### புதுடில்லியில் கண்டன அறிக்கை

வடக்குக் கிழக்கு மாகாண சபையைக் கலைக்கும் மசோ

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸ் டாக்டர்கள் மீது பலாலியில் துப்பாக்கிச் சூடு

(பலாலி)

அனுமதி பெற்றுச் சென்றபோதும் பிரான்ஸ் நாட்டு டாக்டர் மீது பலாலி இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வைத்திய உதவிகளைச் செய்துவரும் பிரான்ஸ் நாட்டு டாக்டர் ஒருவர்

களிடமும் அனுமதியைப் பெற்றுக் கொண்டு விமான நிலையத்துக்கு சென்றபோது அவரை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். உடனே விடுதலைப் புலிகள் இவரைப் பாதுகாப்பாக தமது பதுங்குகுழிக்குள் அழைத்துச் சென்று காப்பாற்

## படையினருக்கு உடனடி மருந்து

(கொழும்பு)

ஐக்கிய இலங்கையானது மின்சார விநியோகம் என்னும் ஒரே ஒரு நூலிழையில் தான் தொங்கிக்கொண்டிருக்கிறது. அதாவது தெற்குக்கும் வடக்குக்கும் இடையிலான ஒரே ஒருதொடர்பு தற்போது மின்சார விநியோகம் தான். வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான ஏனைய அனைத்துத் தொடர்புகளையும், விநியோகங்களையும் அரசு துண்டித்து விட்டது.

**தமிழர்கள் பணயக் கைதிகளா?**

வடக்கே செல்ல அவதிப் படும் தமிழ்மக்களை இங்கே வர அனுமதிக்காது தடுத்து வைத்திருப்பது இவர்களை பணயக்கைதிகளாகப் பயன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் மீதான தாக்குதலுக்கு பல்கலை. மா. அவை கண்டனம்

தமிழ் பகுதிகளில் போர் விமானங்களாலும் ஹெலிகொப்டர்களாலும் நடாத்தப்படும் தொடர் குண்டு வீச்சுக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதிகரிக்கும் பதற்றமும் வன்முறையும் நிலைமையைமேலும் சீர்குலைப்பதோடு, பொது மக்களின் மனதில் தம் நிலைபற்றிய பீதியை வலுவடையச் செய்கின்றன என நேற்று பல்கலைக்கழக மாணவரவை விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கந்தளாயில் ஜிகாத்தால் 12 முஸ்லிம்கள் கோலை

(கந்தளாய்)

கடந்த திங்கட்கிழமை கந்தளாய் பகுதியில் பன்னிரண்டு முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்கள். பின்னர் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இணைந்தே இப்படுகொலைகளை நடத்தியுள்ளனர்.

இவர்களுடன் மேலும்பன்னிரண்டு தமிழ் மக்களும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன. படுகொலை செய்யப்பட்ட பன்னிரண்டு முஸ்லிம்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகின்றது.

# தமிழர் வீடுகள் கோள்ளை ஊர்காவற்படை அட்டகாசம்

(கிண்ணியா)

ஆலங்கேணி பகுதியில்தமிழ் மக்களது வீடுகளில் உள்ள சொத்துக்கள் பெருமளவில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. நிலைமையைச் சாதகமாக்கிக்கொண்ட முஸ்லிம் ஜிகாத் இயக்கத்தினரே இக் கொள்ளைச் சம்பவங்களை நடத்தியுள்ளதாக அங்கிருந்து வந்துள்ள செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை தம்பலகாமம் 96, 98, 99 ஆகிய கிராமங்களில் உள்ள தமிழ்மக்கள் சாமான்கள் வாங்குவதற்காக கிண்ணியாப் பகுதியில் உள்ள கடைகளுக்கு செல்லுகையில் ஊர்காவல் படையினர் பலவாறான துன்புறுத்தல்களை செய்துவருவதுடன், கொலையும் செய்துவருகின்றார்கள்.

# மூதூரில் விமானத் தாக்குதல் 30பேர் பலி; 40 பேர் காயம்

(மூதூர்)

கடந்த வியாழக்கிழமை மூதூரில் முப்பது பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். நாற்பதுக்கு மேற்பட்டோர் பலத்த காயமடைந்துள்ளார்கள்.

இங்கு மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சு, ஹெலிகொப்டர் தாக்குதல் ஆகியவற்றினாலேயே இந்த முப்பது பேரும் கொல்லப்பட்டுள்ளார்கள்.

மூதூர், 59 ஆகிய கிராமங்களின் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதல்களினால் கோயில்கள், கடைகள், வீடுகள் என்பனவும் பலத்த சேதமடைந்துள்ளன.

# மூதூரில் கடும் மோதல்

மூதூரில் விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள இராணுவத்திற்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னேற முயன்ற சிங்கள ராணுவத்தை எதிர்த்து விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். இதைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையில் கடும் சண்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆனால் இழப்புக்கள் பற்றிய மேலதிக விபரம் இன்னமும் வந்து சேரவில்லை. (ம)

## 8 தமிழர் படுகொலை

(கிண்ணியா)

இராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் எட்டுத் தமிழர்கள் மிருகத் தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் உயிருடன் ரயர் போட்டு எரித்துக் கொல்லப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆலயத்தில் அகதிகள்

(கொழும்புத்துறை)

தெல்லிப்பளை அருள் மிகு துர்க்காதேவி ஆலயத்தில் வலி வடக்கைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்கள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளன. இக்குடும்பங்களது தேவைகளை தேவஸ்தான தலைவி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா-அப்பாக்குட்டி கவனித்து வருகின்றார். (24)

## குழந்தைகள் தாபரிப்பு நிதி

(உரும்பராய்)

நாட்டின் சீரற்ற நிலைமை காரணமாக, சனசமூகநிலைய சமாசத்தினர் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு மாதாந்தம் வழங்கப்படும் தாபரிப்பு நிதி இம் மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு நல்லூரில் இருக்கும் யாழ். மாநகர சபைப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளது.

## தமிழர் மீது ஜிகாத் தாக்கு

(சிலாவத்துறை)

மன்னார் மாவட்டத்தில் உள்ள சிலாவத்துறைப்பகுதியில்உங்களால்தான்பிரச்சினை எனக்கூறி சில முஸ்லிம்கள் தமிழ் மக்களைத்தாக்குவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தாக்குபவர்கள் ஜிகாத் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

அத்தோடு தமிழ் மக்களின் சொத்துக்களும் சூறையாடப் படுவதாகத்தெரிகின்றது.

## பெண் கைது தகவலில்லை

(கந்தளாய்)

கந்தளாயைச் சேர்ந்த இருபத்தினான்கு வயது பெண் ஒருவர் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு முகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

தது. இம் மாகாண சபை தானாகக்கலைந்து விட்டதா, கலைக்கப்படுமா? என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்திருந்தது.

ஜனாதிபதியின் ஒப்புதலுடன் சட்டமாகியதும் வடக்குக் கிழக்குமாகாணசபை நேற்றுக் கலைக்கப்பட்டது. இம் மாகாண சபைக்கான புதிய

பிரேமதாசா சம்பிரதாயப்படி பணித்திருக்கிறார்.

இப்போதுள்ள சூழ்நிலையில் வடக்குக்கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்பு இல்லை எனவும் அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

**புதுடில்லியில் கண்டன அறிக்கை**

வடக்குக் கிழக்கு மாகாண சபையைக் கலைக்கும் மசோ

(4ஆம் பக்கம் பார்க்க)

# பிரான்ஸ் டாக்டர்கள் மீது பலாலியில் துப்பாக்கிச் சூடு

(பலாலி)

அனுமதி பெற்றுச் சென்ற போதும் பிரான்ஸ் நாட்டு டாக்டர் மீது பலாலி இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வைத்திய உதவிகளைச் செய்துவரும் பிரான்ஸ் நாட்டு டாக்டர் ஒருவர் நேற்று பலாலி இராணுவத்தினரிடமும், விடுதலைப்புலிகளிடமும் அனுமதியைப் பெற்றுக் கொண்டு விமான நிலையத்துக்கு சென்றபோது அவரை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். உடனே விடுதலைப் புலிகள் இவரைப் பாதுகாப்பாக தமது பதுங்குகுழிக்குள் அழைத்துச் சென்று காப்பாற்றினர். இச்சம்பவம் நேற்று வசாவிளானில் நடைபெற்றது.

## படையினருக்கு உடனடி மருந்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் காயமடைந்த சிறிலங்காவின் படையினருக்குஐம்பதுலட்சம்

(4ஆம் பக்கம் பார்க்க)

**திருமலையில் 30 பேர் படுகொலை:**

# இராணுவம் ஊர்காவற்படையால் பெண்கள் மானபங்கம்; படுகொலை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் 10 பெண்கள் பாலியல் வன்முறைக் குட்படுத்தப் பட்டதுடன் அவர்கள் உட்பட 20 ஆண்கள் கழுத்து வெட்டிக் கொல்லப்பட்டனர்.

திருக்கோணமலை மாவட்டத்தில் சிங்கள இராணுவத்திரும், சிங்கள ஊர்காவற் படையினரும் அங்குள்ள தமிழ் பேசும் மக்களை கடுமையாகத் தாக்கி வருகின்றனர்.

நேற்று முன்தினம் மட்டக்களி, நல்லூர் என்னும் இடங்களில் சிங்கள இராணுவத்தினரும், சிங்கள ஊர்காவற் படையினருமாகச் சேர்ந்து பத்து இளம் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிவிட்டு அவர்களின் கழுத்தை வெட்டிக்கொன்றுள்ளனர்.

அதே இடத்தில் இருபது ஆண்களையும் கழுத்து வெட்டிக் கொன்றுள்ளனர். (ம)

## வீர மரணம்

(வல்வெட்டித்துறை)

கடந்த 4ஆம் திகதி வல்வெட்டித்துறையில் கடற்கரைப் பகுதியில் கடற்படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்றமோதலில் விடுதலைப்புலிகளின் தரப்பில் லெப்ரினன் ஜிம்ரோ என்பவர் வீரமரணமடைந்துள்ளார், மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். (ம)

# முல்லைத்தீவில் ஷெல் வீச்சு; தேவாலயம்; கடைகள் சேதம்

(முல்லைத்தீவு)

நேற்று முல்லைத்தீவு இராணுவ முகாமிற்கு உணவுப் பொதிகளைப் போடும் முயற்சியில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் ஈடுபட்டன. இவ்வாறு போடப்பட்ட பொருட்களில் பெரும் பாலானவை முகாமிற்கு வெளியே வீழ்ந்தன.

இதைத் தொடர்ந்து முகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பழையவேட்டிகள் உதவக்கோரிக்கை

(அரியாலை)

போர்க் காலத்தில் காயம் அடையும் பொதுமக்களுக்கு வைத்திய உதவி செய்வதற்கு உகந்ததாக பன்டேஜ் தயாரிப்பதற்கேற்ற பழைய வெள்ளை வேட்டிகளை அன்பளிப்புச் செய்யும் வண்ணம் பொதுமக்களை அரியாலை சென். ஜோன்ஸ் முதலுதவிப் படை அன்பாக வேண்டிக்கொள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு உதவ வைத்திய ஒழுங்குகள்

**தமிழீழ ஆய்வு நிறுவனம் ஏற்பாடு**

திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த தமிழ் மக்களுக்கு உதவுவதற்கென தமிழீழ ஆய்வு நிறுவனம் சில வைத்தியர்களை ஒழுங்கு செய்துள்ளது.

காட்டுமிராண்டித்தனமான இராணுவத் தாக்குதல்கள் காரணமாகதிருக்கோணமலை மாவட்டத்திலிருந்து வந்து வடமராட்சிகிழக்கு குறிப்பாக செம்பியன்பற்று, தாளையடி ஆகிய இடங்களில் முகாம் அமைத்து தற்காலிகமாக இருக்கும் மக்களுக்கு மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்யும் முகமாக ஒரு சில வைத்தியர்களை அப்பகுதிக்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் அனுப்பி வைத்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

**கிளிநொச்சியில்**

# இராணுவம் வெளியேவர முயற்சி புலிகள் முறியடிப்பு

(கிளிநொச்சி)

நேற்று கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் சச்சேரி, பெற்றோலியக் கூட்டுத்தாபன பகுதி என்பன நோக்கி முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் அவர்கள்மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரை அழிக்க காடையர்களுக்கு ஸ்ரீலங்கா அரசு ஆயுதம் வழங்குகிறது

ஸ்ரீலங்கா அரசு எல்லைப் புறப் பாதுகாப்பு என்று கூறிக் கொண்டு சிங்கள ஊர்காவற் படையினருக்கும், சிங்களக் காடையர்களுக்கும் நவீன ஆயுதங்களைக் கொடுத்து வருகின்றது. இந்த ஆயுதங்களுடன் சிங்கள ஊர்காவற் படையினரும் சிங்களக்காடையர்களும் தமிழ் பேசும் மக்களைப் பல இடங்களில் கொலை செய்துவருகின்றனர் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இப் படுகொலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. தமிழீழத்தில் ஆறுலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் அகதிகளாக உள்ளனர். இதுவரை இவர்களுக்கு மருத்துவ வசதிகளோ

(4ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

இடம் மாற்றம்

அண்ணா கோப்பிக்கடை, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் மக்களுக்கு சேவை செய்யும் முகமாக திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் நோக்கிய பாதையில் சாயி மெடிக்கலுக்குப் பக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். அண்ணா கோப்பி, திருநெல்வேலி.

(B-1223)


# யுத்தத்தின் இறுதி நடவடிக்கையே அணு ஆயுத பிரயோகம்!

## நேட்டோ பிரகடனம்

(லண்டன்)

அணு ஆயுத பிரயோகம் என்பது இரு நாடுகளுக்கு இடையிலான யுத்தத்தின் இறுதி நடவடிக்கையாகவே அமைய வேண்டுமென்று நேட்டோ அமைப்பு நாட்டுத் தலைவர்களின் இறுதி மகாநாடு பிரகடனப்படுத்தியுள்ளது. நேட்டோவின் இந்தப் பிரகடனம் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள ஒரு திருப்பு முனை என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

பிரிட்டிஷ் தலைநகரான லண்டனில் கூடி முடிவடைந்துள்ள நேட்டோ நாடுகளின் மகாநாடு மேற்கண்ட பிரகடனத்தை அறிவித்துள்ளதுடன்; ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நாடாளுமன்றம் போன்றதொரு ஐரோப்பிய பேரவை என்று சொல்லப்படும் சட்ட மன்றம் ஒன்றை அமைக்க வேண்டுமென்றும் பிரகடனம் செய்துள்ளது.

ஐரோப்பிய வட்டாரத்துக்குள் பாதுகாப்பு, கூட்டுறவு ஆகியவற்றை உறுதிபடுத்தும் வகையில் நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கும் 35 நாடுகளின் ஆதரவோடு அமைக்கப்படவுள்ள இந்த சட்ட மன்றத்துக்கான இறுதி முடிவு இவ்வாண்டு இறுதியில் பாரிஸ் நகரில் நடைபெறவுள்ள கூட்டத்தின் போது எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெருக்கடிகளை தவிர்த்தல், இராணுவத்தகவல்களை பரிமாறிக் கொள்ளுதல் உட்பட உறுப்பு நாடுகளுக்கிடையிலான பிணக்குகளை தீர்த்துக் கொள்ளுதல் என்பனவும் இந்த சட்டமன்றத்தின் இலட்சியங்களாக அமைந்திருக்கும்.

அமெரிக்கா, கனடா உட்பட நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் இந்த சட்டமன்றத்தில் அங்கம் வகிக்க வேண்டுமென்று விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்
(வரைவுள்ளது)

கலந்துரையாடல்

காலம்: 12-07-1990 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9-00 மணி

இடம்: தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மண்டபம்.

தலைவர்: திரு. சி. சிவமகாராசா, தலைவர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்.

கலந்துரையாடல் விடயம்

1. சங்கக்கிளைகளின் பாதுகாப்பு.
2. உணவுப்பற்றாக்குறை, பங்கீட்டுமுறை, விநியோக ஒழுங்குமுறை.
3. அத்தியாவசிய உணவுப்பொருள் கொள்வனவுக்கு உதவுதல்.
4. தடைகள், வசதிக்குறைவுகள் மத்தியிலும் உணவு உற்பத்திசெய்தல், ஊக்குவித்தல், உதவுதல்.

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழு, நெறியாளர்குழு, மகளிர்குழு உறுப்பினர்கள், சங்கப்பணியாளர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சி. முருகையா
செயலாளர்
தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்

தெல்லிப்பளை.
05-07-1990

(B/ 1229)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 23 - 03 - 1905



மறைவு 08 - 06 - 1990

திருமதி தங்கம்மா கந்தையா

எமது அன்புக்கும், பாசத்துக்கும் உரிய தாயார் எம்மைவிட்டுப் பிரிந்து சிவபதமடைந்து 31 நாட்கள் சென்றாலும் அவரின் நினைவு எங்களைவிட்டு என்றும் அகலாது.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சி இன்று (08. 07. 1990) ஞாயிற்றுக்கிழமை பகல் பன்னிரண்டு (12-00) மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

87, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.

(B-1230)


## அகதிகளுக்கு இடநெருக்கடி புதிய முகாம் அமைக்க ஏற்பாடு

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகளின் வருகை வெகுவாக அதிகரித்துள்ளதால் இராமநாதபுரம், மண்டபம் முகாம், திருச்சி கொட்டப்பட்டு முகாம் ஆகியவற்றில் பெரும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு வந்தடையும் அகதிகளை பராமரிப்பது பற்றிய அவசர கூட்டமொன்று நேற்று முன்தினம் சென்னையில் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது ஏற்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் இடநெருக்கடியை சமாளிக்கும் வகையில் சேலம், மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், சிதம்பரம் ஆகிய இடங்களில் புதிய முகாம்களை உடனடியாக அமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி பணித்துள்ளார்.

மேற்படி முகாம்களில் உணவு, குடிநீர், மருத்துவ வசதிகளை தடங்கலின்றி வழங்க ஏற்பாடு செய்யுமாறு முதல்வர் அதிகாரிகளுக்கு பணித்துள்ளதுடன் அகதிகளுக்கான பாதுகாப்புக்களையும் முழுமையாக வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார்.


விரைவில்....

தமிழ்முரசு
THE TAMIL MURASU

காலத்தின் தேவை கருதி வெளியாகும் செய்தி விமர்சன வார இதழ்

(R.506)



நியு விமாகி செரிமிக்ஸ்

தற்பொழுதுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக எமது ஸ்தாபனம் மானிப்பாயில் இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாக இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

செரிமிக்ஸ் உற்பத்திப் பொருட்களும், மாபிள் கற்கள் போன்றவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(B-1222)



இடம் மாற்றம்

141. 143. யாழ். ஸ்ரான்லி வீதியில் இயங்கிய நியூரோன் எலெக்ரிக்கல்ஸ் ஸ்தாபனம்

தற்போதைய சூழ்நிலைமை காரணமாக வாடிக்கையாளரின் நன்மை கருதி இடம் மாற்றம் செய்துள்ளோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

- விவசாய வீட்டுத் தேவைக்கேற்ற மின் மோட்டார்கள்.
- எஸ். லோன் பைப் வகைகள்.
- வீட்டுப் பாவனைக்கேற்ற மின்சார உபகரணங்கள்
- மின் பல்ப் வகைகள் ஆகியன பெற்றுக் கொள்ளலாம்.

புதிய முகவரி
இல 26. சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(பல்கலைக்கழக முன்வீதி)

(R./505)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப் பிறப்பு 23 — 09 — 1971



வீர மரணம் 08 — 07 — 1989



உங்கள் நீண்டகால பாவனைகளுக்குகந்த உறுதியான மரத் தளபாடங்கள்

இணுவிலில்

**திருமதி தங்கம்மா கந்தையா**

எமது அன்புக்கும், பாசத்துக்கும் உரிய தாயார் எம்மைவிட்டுப் பிரிந்து சிவபதமடைந்து 31 நாட்கள் சென்றாலும் அவரின் நினைவு எங்களைவிட்டு என்றும் அகலாது.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சி இன்று (08. 07. 1990) ஞாயிற்றுக்கிழமை பகல் பன்னிரண்டு (12-00) மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

87, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.

அவர் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(B-1230)

தற்பொழுது ஏற்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் இடநெருக்கடியை சமாளிக்கும் வகையில் சேலம், மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், சிதம்பரம் ஆகிய இடங்களில் புதிய முகாம்களை உடனடியாக அமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி பணித்துள்ளார்.

மேற்படி முகாம்களில் உணவு, குடிநீர், மருத்துவ


உங்கள் நீண்டகால பாவனைகளுக்குகந்த
உறுதியான மரத் தளபாடங்கள்

## இணுவிலில்

- கட்டில்
- கதிரைகள்
- ஷோகேஸ் வகைகள்
- செற்றிகள்
- மேசைகள்
- காரியாலய மேசைகள்
- கண்ணாடி மேசைகள்
- காரியாலய அலுமாரிகள்

இன்னும் பலபல தளபாடங்களின்
மொத்த விற்பனையாளர்கள்...:

## நவரட்ணம் தச்சுத் தொழிற்சாலை

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு,
இணுவில்.

(B.1221)


(R.506)

## இடம் மாற்றம்

**141. 143. யாழ். ஸ்ரான்லி வீதியில் இயங்கிய**

## நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

**ஸ்தாபனம்**

தற்போதைய சூழ்நிலைமை காரணமாக வாடிக்கையாளரின் நன்மை கருதி இடம் மாற்றம் செய்துள்ளோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

- விவசாய வீட்டுத் தேவைக்கேற்ற மின் மோட்டார்கள்.
- எஸ். லோன் பைப் வகைகள்.
- வீட்டுப் பாவனைக்கேற்ற மின்சார உபகரணங்கள்
- மின் பல்ப் வகைகள் ஆகியன பெற்றுக் கொள்ளலாம்.

புதிய முகவரி
இல 26. சேர் பொன்இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(பல்கலைக்கழக முன்வீதி)

(R /505)

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத்தெரு இலக்கம் 106 இல் இயங்கி வந்த அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், தற்பொழுது மானிப்பாய் வீதி உரும்பிராயில் யாழ். கல்லூரி விவசாயப் பண்ணைக்கு அருகாமையில் திரு அ. நல்லதம்பி அவர்களின் இல்லத்திற்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

செயலாளர்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

06-07-90

(B/ 1228)

## நினைவஞ்சலி

வீரப் பிறப்பு
23
—
09
—
1971



வீர மரணம்
08
—
07
—
1989

**அம்பிகைபாகன் அன்பழகன்**
**(அன்பு)**

குருதியால் நனைந்தது தமிழர்தம் ஈழம்.
குன்றென நிமிர்ந்தனர் இளையஎம் வீரர்.
எருமையாய் அந்நியர் இழைத்திடும் தீமை
எதிர்த்தழித் திடவெனத் திரண்டனர் மறவர்
அன்பழக, நீயொரு காவிய மானாய்.
அந்நியர் பெரும்படை தொலைந்தது. மீண்டும்
தென்னவர் வந்தனர். அன்பழகா நீ
தொலைத்திட அவர்படை மறுபடி வருவாய்.

குடும்பத்தினரும்
உறவினர் நண்பர்கள்

'அன்பகம்'
நாயன்மார்கட்டு
யாழ்ப்பாணம்.

(R-503)

# வாடிக்கையாளர்களுக்கு

**74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்; இயங்கிவந்த "நியூ லலிதா ஜுவலர்ஸ்" ஸ்தாபனம்**

நாட்டின் நிலைமை காரணமாக இதுவரை காலமும் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த வியாபாரம்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

**7-7-1990 சனிக்கிழமை காலை 9-00 மணிதொடக்கம் மாலை 1-00 மணிவரையும் வியாபாரத்திற்காக மேற்படி ஸ்தாபனம் திறந்திருக்கும் என்பதை தெரியப்படுத்துகின்றோம்.**

இதுவரை காலமும் எமக்கு அளித்த ஆதரவை மீண்டும் தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

வீட்டு முகவரி: நம். 55, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்

**நியூ லலிதா ஜுவலர்ஸ் ஸ்தாபனம்**

(B-1227)

## சிந்தனைக்கு

''கும்மியடி தமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கை கொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி''

– பாரதியார்.


# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 08-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## பெண்மை காட்டும் வழி!

''பட்டங்களாள்வதுஞ்
சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினிலாணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைக் காணென்று கும்மியடி''

மகாகவி பாரதியார் கனவு கண்ட புதுமைப்பெண்கள் தமிழ் நாட்டில் தோன்றியிருக்கிறார்களோ இல்லையோ தெரியாது; ஆனால் தமிழீழத்தில் பாரதியார் கண்ட புதுமைப் பெண்களை இப்பொழுது பாரதியார் உயிருடனிருந்தால் கண்டு மனம் பூரித்து இன்னும் எத்தனையோ பாடல்களைப் பாடியிருப்பாரென்பது நிச்சயம்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் வேலுநாச்சியார், ராணிமங்கம்மாள், ஜான்சிராணி போன்ற ராஜ பரம்பரையைச் சேர்ந்தபெண்களே வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

இவர்கள் தமது ஆட்சியையும் அதன் மூலம் தமது மண்ணையும் மக்களையும் காப்பதற்காக ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்கலாம்.

இன்று இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அதாவது தமிழீழத்தில் மண்ணையும் மக்களையும் காப்பதற்காக ஆயுதம் ஏந்தி நிற்கும் வீரப்பெண்கள் அரச பரம்பரையில் வந்தவர்களல்லர்.

சாதாரண குடும்பங்களில் பிறந்து சாதாரண மக்களுடன் வாழ்ந்து பள்ளிக்கூடத்தில் படித்தவர்களும் பட்டம்பெறப் படித்தவர்களும் உத்தியோகம் பார்த்துக் குடும்பத்தைக் காப்பாற்றவும் எல்லாப் பெண்களையும் போல் சிதனத்துக்கு உழைத்து ''தந்நாமம் கெட்டுத் தலைவன்'' பின்னால் செல்லக் காத்திருந்தவர்களே இன்று மண்ணையும் மக்களையும் காப்பதற்காக ஒரே தலைவன் பின்னால் அணிதிரண்டு நிற்கிறார்கள்.

எதிரியின் படையை எதிர்கொண்டு ஆயுதம் ஏந்தி நிற்கும் வீராங்கனைகள் தம்மை தமிழீழத்துக்கே அர்ப்பணித்து அணிதிரண்டு நிற்கிறார்கள்.

போர்முனையில் ஆயுதம் ஏந்திப் போராடி மக்களைப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருக்கும் வீராங்கனைகள் தமது பணியைச் செய்துகொண்டிருக்கையில் போர் முனைக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைக்காத பெண்கள் செய்யக்கூடிய, செய்யவேண்டிய பணிகள் மேலும் பல இருக்கின்றன

# யார் பக்கம் சமாதானம்?

''போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' எனக் கண்டி மன்னன் விமலதர்ம சூரியன் டச்சுத் தளபதிக்கு 17 ஆம் நூற்றாண்டு கூறிய வார்த்தை இது.

''போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' என அப்போது பிரதமராய் இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமிழ் மக்களைப் பார்த்து 1977ஆம் ஆண்டு கூறிய வார்த்தை.

''போருக்கும் தயார்; பேச்சு வார்த்தைக்கும் தயார்'' என ஜனாதிபதி றணசிங்க பிரேமதாசா தமிழ் பேசும் மக்களுக்கு 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் கூறியுள்ள வார்த்தை.

சர்வதேச சட்ட சம்மேளன இலங்கைக் கிளையின் கருத்தரங்கொன்றில் 1954 ஆம் ஆண்டு உரையாற்றுகையில் மேற்படி விமலதர்மசூரியனின் வார்த்தையை ஜே. ஆர். மேற்கோளாக எடுத்துக்காட்டினார். இவ்வாறு 1954 ஆம் ஆண்டு அதனை ஒரு மேற்கோளாக மட்டுமே எடுத்துக்காட்டிய ஜே. ஆர். நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் மீது அதனை ஒரு போர்ப் பிரகடனமாகவே 1977 ஆம் ஆண்டு பிரயோகித்தார்.

ஜே ஆர். கூறியதும், பிரேமதாசா கூறியதுமான வார்த்தைகளின் அடிப்படை அர்த்தம் உண்மையில் ஒன்றுதான்.

**போருக்கும் தயார்; சமாதானத்திற்கும் தயார்** என்றுதான் இந்த பேரினவாதத் தலைவர்கள் இருவரும் கூறியுள்ளனர்.

சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் எப்போது தமிழ் மக்களுடன் சமாதானத்திற்குத் தயாராக இருந்தனர்? வரலாற்றில் ஓர் உதாரணத்தையேனும் அவர்களால் காட்ட முடியுமா?

ஆனால் மாறாக தமிழ் மக்கள்தான் சமாதானத்திற்கு தயாராய் இருந்துள்ளனர். தமிழ் மக்கள் சமாதானக் கரத்தை நீட்டிய ஒவ்வொரு கட்டத்திலும் பேரினவாதிகள் அக்கரங்களை தறித்து வீழ்த்தினர்.

தமிழ் மக்கள் எப்பொழுதும் பேச்சுவார்த்தையையும் சமாதானத்தையும் விரும்பினர்.

1925ஆம் ஆண்டு கொறியா-துரைசுவாமி ஒப்பந்தம் நிகழ்ந்தது. வைத்திலிங்கம் துரைசுவாமியின் வீட்டில் வைத்து ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டுச் சென்ற சிங்களத் தலைவர்கள் வெட்கக்கேடான முறையில் அந்தச் சமாதான உடன்பாட்டை மீறினர்.

இதே போலத்தான் இதற்கு முன்பு சேர் பொன். அருணாசலத்திடம் 1919ஆம் ஆண்டு ஜேம்ஸ் பீரீஸ் ஒப்புக்கொண்டவற்றை 1920 ஆம் ஆண்டு மீறினார். இந்த வகையிற்தான் பின்பு 1957 ஆம் ஆண்டு பண்டா—செல்வா ஒப்பந்தமும், 1965 ஆம் ஆண்டு டட்லி—செல்வா ஒப்பந்தமும் பின்பு 1981 ஆம் ஆண்டு ஜே. ஆர். — அமிர் உடன்பாடும் (மாவட்ட அபிவிருத்திச் சபை) ஆகின.

உண்மை இப்படி இருக்க ''சமாதானம் என்றால் சமாதானம்'' என்று சிங்களப் பேரினவாதிகள் எப்படிக் கூறமுடியும்? சமாதானத்தின் விரோதிகள் சமாதானத்தைப் பற்றிக் கூறுவது சாத்தான் ஓதும் வேதத்தை விடவும் மோசமானது.

இதற்கான உண்மைகளை மேலும் விரிவாக நோக்குவோம். இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும், ஐக்கியத்திற்கும் சமாதானத்திற்குமாக தமிழ்த் தலைவர்கள் பெரிதும் குரல் கொடுத்துள்ளனர். சுதந்திரம் பற்றிச் சிங்களத் தலைவர்கள்கூடச் சிந்திக்காதிருந்த காலகட்டத்தில் இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டும் என்ற கொள்கையை முதல் முறையாக 1919ஆம் ஆண்டு முன்வைத்தவர் சேர் பொன். அருணாசலம்.

ஒரு புறம் தமிழ் தலைவர்கள் தீர்க்கதரிசனமற்றுச் செயற்பட்டுள்ளார்கள் என்று தமிழ் மக்கள் வேதனைப்பட வேண்டியது உண்மையே. ஆயினும் மறுபுறம் நாட்டின் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் தமிழ்த் தலைவர்கள் பெரிதும் வற்புறுத்தி இருந்தனர் என்ற உண்மையை பேரினவாதிகள் மறந்து போகக் கூடாது.

1925ஆம் ஆண்டு கண்டியர் சங்கம் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த போதும், 1926 ஆம்ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சமஷ்டி பற்றிய கருத்தை முன்வைத்த போதும் ஒற்றையாட்சி அமைப்புக்குள் தாம் உரிமையுடன் கௌரவமான

### சாரணன்

இனமாக வாழ்வதையே தமிழ்த் தலைவர்கள் விரும்பி இருந்தனர். தமிழர்மகாசபை, யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்பன ஒற்றையாட்சி முறையின் மீதான தீர்வை விரும்பி இருந்தன.

ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் வாழ்வதற்கான சமாதான பூர்வமான உரிமைகளை எல்லாம் இனவாதத் தலைவர்கள் மறுத்தபோதுதான் தமிழர் பக்கம் ஒரு சிறு விழிப்பு ஏற்பட்டது. அந்த விழிப்பே சமஷ்டிக் கோரிக்கையாக 1949ஆம் ஆண்டு வெளிப்பட்டது.

சமஷ்டியைக்கூட எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சி சமாதானபூர்வமாகவே கோரியது. 1956ஆம் ஆண்டுத் தேர்தலின் மூலம் தமிழரசுக் கட்சியே தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த தலைமை என்பது நிரூபணமாகியது. அப்படியிருந்தும் அக்கட்சியின் கோரிக்கைகளையும், பேச்சுவார்த்தைகளையும், ஏன் சமாதான முறையில் தீர்த்து வைக்கச் சிங்கள இனவாதத் தலைவர்கள் தவறினர்?

ஜே. ஆரினதும், பிரேமாவினதும் சமாதானம் என்றால் சமாதானம் என்னும் கொள்கை உண்மைதானா?

இன்னும் ஒருபடி மேலே போவோம். 'சமஷ்டி' கோரிய செல்வநாயகம், சமாதானம் விரும்பி, சமாதான பூர்வமான தீர்வை விரும்பி தான் கோரிய சமஷ்டியிலும் குறைவானதாக பண்டாரநாயக்கா தருவதாகக் கூறி முன்வைந்த பிராந்திய சபை முறைக்கு ஒப்புக் கொண்டார். தான் ஒப்புக் கொண்ட பிராந்திய சபையை பண்டாரநாயக்கா மீறிய பின்பு அதற்கும் குறைவான மாவட்ட சபை முறைக்கு 1965ஆம் ஆண்டு செல்வநாகம் ஒப்புக் கொண்டிருந்தார். அதனையும் சிங்களத் தலைவர்கள் மீறினர். உரிமை என்பது கிள்ளுக்கீரையல்ல, ஆயினும் தமிழ்த் தலைவர்கள் சமாதானத்தை விரும்பி அதனைக்கூட விட்டுக் கொடுத்துள்ளனர் என்பதே இங்கு எடுத்துக்காட்ட வேண்டியதாகும்.

1956ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் அமைதியாக உண்ணாவிரதம்இருந்தவர்கள் மீது காடைத்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டவர்கள்!

1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகிகள் மீது இராணுவத்தைக் கட்டவிழ்த்து விட்டவர்கள்! அகிம்சையை இம்சையால் எதிர்கொள்பவர்கள் சமாதானம் என்றால் சமாதானம் என்ற வார்த்தையை உச்சரிக்கிறார்கள்.

கண்டி மன்னன் விமலதர்ம சூரியன் டச்சு ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகப் பயன்படுத்திய அந்த புனிதமான வார்த்தையை இப்போது சிங்கள பேரினவாதிகள் தமது உரிமையையே கோரும் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறார்கள்.

1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் 8 இறாத்தல் தானியம் தருவதாகப் பொய் வாக்குறுதி அளித்த ஜே. ஆர். 8 இறாத்தல்பிண்ணாக்குக்கூட கொடுக்கமுடியாத நிலையில் அவருக்கு ஒரு யுத்தம்தேவைப்பட்டது வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத பலவீனத்தை யுத்தமாகத்திசை திருப்பினார்;

யார் மீது யுத்தம்? நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் மக்கள் மீது ஆயுதம் தாங்கிய குண்டர்களும் அரச படையும் புரிந்த யுத்தம். அப்பாவித் தமிழ் மக்கள் மீது தான் பிரகடனப் படுத்தும் யுத்தத்திற்கு ஒரு விளக்கம் அளிக்கமுற்பட்டார் ஜே. ஆர்.

அதாவதுசமாதானத்தையே எந்நாளும் விரும்பிய ஒருவர் சமாதானத்திற்காகச் செய்த எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்த போது, சமாதானத்தின் மீது கொண்ட அளவற்ற காதலினால் தவிர்க்கமுடியாத நிலையில் யுத்தத்திற்குத் தயாராகும் ஒரு காருண்ணிய மூர்த்தியின் தோரணையில் இன்னும் சமாதானத்திற்குத் தயாராகவே உள்ளேன், என்ற பாங்கில் 'போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம் என பிரகடனப்படுத்தினார் ஜே. ஆர்.

வரலாற்றில் பதிந்து விட்ட இந்த அசிங்கமான பகுதியை எந்த மஞ்சற் காவி வஸ்திரத்தாலும் மூடி மறைத்துவிட முடியாது.

இந்த ஜே. ஆர். பின்வந்த பிரேமா அவரது பாணியில் போருக்கும் தயார்; பேச்சு வார்த்தைக்கும் தயார் என்று கூறுகிறார். இராணுவத்தின் தாளத்துக்கு ஆட்டம் போடும் பிரேமா 'காருண்ணிய மூர்த்தியின்' தோரணையில் வார்த்தைகளை உதிர்க்கிறாரோ?

வரலாற்றின் பக்கங்களைப் பிரேமா தட்டட்டும்.

சமாதானம் யார் பக்கம்?

# சங்கிலியன் படைகள் இடித்துத் தள்ளிய பின்னும் எழுந்தகோட்டை!

ணக் கோட்டையை ஒல்லாந்தர் கைப்பற்றினர். ஒல்லாந்தரின் கோட்டை முற்றுகை உலக வரலாற்றிலேயே படு பயங்கரமான, மிக மோசமான முற்றுகையாக இடம் பெற்றுவிட்டது.

(தொடரும்)

காப்பதற்காக ஆயுதம் ஏந்தி நிற்கும் வீரப்பெண்கள் அரச பரம்பரையில் வந்தவர்களல்லர்.

சாதாரண குடும்பங்களில் பிறந்து சாதாரண மக்களுடன் வாழ்ந்து பள்ளிக்கூடத்தில் படித்தவர்களும் பட்டம்பெறப் படித்தவர்களும் உத்தியோகம் பார்த்துக் குடும்பத்தைக் காப்பாற்றவும் எல்லாப் பெண்களையும் போல் சீதனத்துக்கு உழைத்து ''தந்நாமம் கெட்டுத் தலைவன்'' பின்னால் செல்லக் காத்திருந்தவர்களே இன்று மண்ணையும் மக்களையும் காப்பதற்காக ஒரே தலைவன் பின்னால் அணிதிரண்டு நிற்கிறார்கள்.

எதிரியின் படையை எதிர்கொண்டு ஆயுதம் ஏந்தி நிற்கும் வீராங்கனைகள் தம்மை தமிழீழத்துக்கே அர்ப்பணித்து அணிதிரண்டு நிற்கிறார்கள்.

போர்முனையில் ஆயுதம் ஏந்திப் போராடி மக்களைப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருக்கும் வீராங்கனைகள் தமது பணியைச் செய்துகொண்டிருக்கையில் போர் முனைக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைக்காத பெண்கள் செய்யக்கூடிய, செய்யவேண்டிய பணிகள் மேலும் பல இருக்கின்றன என்று சில இளம் பெண்கள் வழிகாட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

விடுதலைப்புலிப் போராளிகளை நேருக்கு நேர் சந்தித்துப் போர்புரியத் திராணியற்ற சிறிலங்கா ஆயுத படைகள்விமானத்திலிருந்து குடிமக்கள்வாழும்பகுதிகளில் கண்மூடித்தனமாகக் குண்டு மாரி பொழிந்தும் ஷெல் அடித்தும் மக்களைக் கொல்வதிலும் சொத்துக்களை அழிப்பதிலும் ஈடுபட்டுவருகின்றன.

விமானக்குண்டு வீச்சிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பதுங்கு குழிகள் வெட்டி ஆபத்திலிருந்து தப்பிக்கொள்ளவேண்டும் என்று விடுதலைப் புலிகள் ஆலோசனை கூறியிருக்கின்றனர்.

இவ்விதம் பதுங்குகுழிகள் வெட்டியதனால் கண்மூடித்தனமாக விமானங்கள் குண்டுவீசித்தாக்கிய போதிலும் வடக்கிலும் கிழக்கிலும் உயிர்ச்சேதம் குறைவாக உள்ளது.

பதுங்குகுழிகள் வெட்டுவதற்கு வாய்ப்பும் வசதியும் இல்லாதவர்களும் வீட்டிலிருந்து அவசர அலுவலாக வெளியே சென்றவர்களும் திடீரென வானில் தோன்றி விமானங்கள் குண்டு வீசத்தொடங்கினால் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வழியில்லை.

இரண்டாவது யுத்த காலத்தில் ஆகாயவிமானத் தாக்குதல் பாதுகாப்பு (ஏ. ஆர். பி.) ஏற்பாடுகளைக் கவனிக்க ஓர் அமைப்பே உருவாக்கப்பட்டிருந்தது. இந்த அமைப்பு பாடசாலைகள், மற்றும் பொதுமக்கள்கூடும் பொதுஇடங்களில் பதுங்குகுழிகள் வெட்டியும் மணல்மூடைகளை அடுக்கியும் குண்டுவீச்சினால் தீப்பிடித்தால் அதை அணைப்பதற்கு தண்ணீர்த் தாங்கிகளை அமைத்தும், குண்டுவீச்சுச் சமயத்தில் மக்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று பயிற்சியளித்தும் சேவை செய்தன.

இப்பொழுதுபொது அமைப்புக்களோ, பெரியவர்களோ இவைபற்றிச் சிந்திக்கவேயில்லை. ஏன் படித்துவிட்டு வீதிகளில் ''விடுப்புப் பார்த்துத்திரியும்'' இளைஞர்கள்கூட இது பற்றிச் சிறிதும் யோசிக்கவேயில்லை.

ஆனால் படித்த இளம் பெண்கள் சிலர் யாருடைய ஆலோசனையுமின்றிப் பொதுமக்கள் தங்கள் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பொது இடங்களில் தாங்களே பதுங்குகுழிகள் வெட்டி அரண் அமைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள்.

மக்களையும் மண்ணையும் பாதுகாப்பதற்கு ஆயுதம் ஏந்தி மட்டும்தான் போராடவேண்டுமென்றில்லை; ஆயுதம் ஏந்தாமலும் ஆண்களும் பெண்களும் மக்களையும் மண்ணையும் பாதுகாப்பதற்குத் தங்களால் இயன்ற பணியைச் செய்யமுடியுமென்பதை எடுத்துக்காட்டி இருக்கிறார்கள் இந்தப் பெண்கள்.

இவர்கள் காட்டிய வழியை இன்னும் பலர் பின்பற்றலாம்; பின்பற்றவேண்டும்.

---

களால் காட்ட முடியுமா?

ஆனால் மாறாக தமிழ் மக்கள்தான் சமாதானத்திற்கு தயாராய் இருந்துள்ளனர். தமிழ் மக்கள் சமாதானக் கரத்தை நீட்டிய ஒவ்வொரு கட்டத்திலும் பேரினவாதிகள்

...திருந்த காலகட்டத்தில் இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டும் என்ற கொள்கையை முதல் முறையாக 1919ஆம் ஆண்டு முன்வைத்தவர் சேர் பொன். அருணாசலம்.

ஒரு புறம் தமிழ் தலைவர்கள் தீர்க்கதரிசனமற்றுச்

...சியே தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த தலைமை என்பது நிரூபணமாகியது. அப்படியிருந்தும் அக்கட்சியின் கோரிக்கைகளையும், பேச்சுவார்த்தைகளையும், ஏன் சமாதான முறையில் தீர்த்து

...ருக்கு எதிராகப் பயன்படுத்திய அந்த புனிதமான வார்த்தையை இப்போது சிங்கள பேரினவாதிகள் தமது உரிமையையே கோரும் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறார்கள்.

பிரேமா 'காருண்ணிய மூர்த்தியின்' தோரணையில் வார்த்தைகளை உதிர்க்கிறாரோ?

வரலாற்றின் பக்கங்களைப் பிரேமா தட்டட்டும்.

சமாதானம் யார் பக்கம்?

---

# சங்கிலியன் படைகள் இடித்துத் தள்ளிய பின்னும் எழுந்த கோட்டை!

யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றி ஆயிரம் மீற்றர் சுற்றளவுக்கு பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக தேசிய பாதுகாப்பு அதிகாரிகள் இந்த ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தைப் பிரகடனம் செய்துள்ளனர். இச்சமயத்தில் யாழ்ப்பாணம் கோட்டை பற்றிச் செய்திகள் பலமாக அடிபடுகின்றன. பழம்

## யாழ்ப்பாணக் கோட்டை உருவான வரலாறு

பெருமை வாய்ந்த யாழ்ப்பாணம் கோட்டை பற்றிய வரலாற்றை மீண்டும் நினைவு கூருவது பயனுள்ளதாகும்.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது உள்ள கோட்டை டச்சுக்காரர் என்று அழைக்கப்படும் ஒல்லாந்தரால் கட்டப் பெற்றது.

இதற்கு முன்பு இதே இடத்தில் போர்த்துக்கேயர் ஒரு கோட்டையை அமைத்திருந்தார்கள்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்துக்கு வியாபாரிகள் என்று சொல்லியே வந்து சேர்ந்தனர். இக்காலத்தில் சங்கிலி மன்னன், யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தான். யாழ்ப்பாண இராஜ்யத்துக்குள் வந்து சேர்ந்த போர்த்துக்கேயர் சிலர் தாங்கள் வியாபாரிகளென்றும்; தங்களுக்கு யாழ்ப்பாணத்தில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்குமாறும் சங்கிலி மன்னனிடம் வேண்டுகோள் விடுத்தனர். மன்னனுக்கு இதில் விருப்பமில்லை. அமைச்சர் அனுமதி தருமாறு மன்னனுக்கு ஆலோசனை கூறி வந்தார்.

அமைச்சரின் ஆலோசனையின் மீது பறங்கியர் வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கிய சங்கிலி மன்னன் ஒரு நிபந்தனையும் விதித்தான். பகலில் வியாபாரம் செய்யவும். மாலையானதும் பறங்கியர் தங்கள் பாய்க்கலங்களுக்குள் போய் சேர்ந்துவிட வேண்டுமென்பதும் தான் அந்த நிபந்தனை. இதனை ஏற்றுக் கொண்ட போர்த்துகேயர் தங்கள் குள்ள மூளையைச் சரியாகச் செயல்படுத்தினர்.

விலையுயர்ந்த பல பொருள்களை பறங்கியர் மன்னனுக்கு அடிக்கடி அன்பளிப்பாக வழங்கினர். சங்கிலி மன்னன் இப்பரிசுப் பொருள்களில் மயங்கினான்!

சமயம் பார்த்து இரவில் தங்கள் கலங்களில் தங்குவதிலுள்ள கஷ்டங்களைப் பறங்கியர் மன்னனிடம் எடுத்துக் கூறி தாங்கள் தங்குவதற்கு நாட்டில் ஒரு சிறு இடம் தருமாறு கேட்டனர்.

பறங்கியர் மீது இரக்கம் கொண்ட சங்கிலி மன்னன் நகருக்கு வெளியே ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் அவர்கள் தங்குவதற்கு அனுமதியளித்தான். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட போர்த்துக்கேயர் நகருக்கு வெளியே ஒதுக்குப்புறமாகக் காட்டுக்குள் களிமண் மற்றும் பொருட்களைக் கொண்டு ஒரு கோட்டையை அமைத்தனர். வியாபாரிகள் வேஷத்தில் ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் கொண்டு வந்து கோட்டைக்குள் சேர்த்தனர்.

ஒரு நாள் சங்கிலி மன்னன் வேட்டைக்குச் சென்று திரும்புகையில் இந்தக் கோட்டையை கண்டான். இதைப் பற்றி விசாரித்து அறிந்தும் அதை இடித்து விடும்படி உத்தரவிட்டான். இதற்கு போர்த்துக்கேயர் ஆட்சேபம் தெரிவித்தனர். கோட்டையை இடிக்க விட முடியாதென்று அவர்கள் எதிர்த்து நின்றனர்.

பறங்கியருக்கும், சங்கிலியனின் படைகளுக்குமிடையில் சண்டை மூண்டது. ஏழு நாட்கள் நீடித்த இந்த சண்டையின் போது பறங்கியர் துப்பாக்கிகளைப் பயன்படுத்தினர். துப்பாக்கிகள் பற்றி எதுவுமே அறிந்திராத சங்கிலியனின் போர்வீரர்கள் பறங்கியரை எதிர்த்துச் சண்டையிட்டு தோற்கடித்தனர். பறங்கியரின் கோட்டையையும் இடித்துத்தள்ளினர்.

ஆனாலும் பறங்கியர் சங்கிலி மன்னன் நினைத்தது போல் இலேசானவர்களல்லர். அவர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்துக்குள் வந்து கொண்டிருந்தனர். கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் 1620 ஆம் ஆண்டளவில் பறங்கியர் அதே இடத்தில் நிரந்தரமான ஒரு கோட்டையை அமைத்தனர். அது சிறியதாக இருந்த போதிலும் நிரந்தரமாகிவிட்டது.

**செய்திக்கதிர் 15 - 02 - 1986 இதழில் வெளிவந்த கட்டுரையின் மறுபிரசுரம்**

### ஒல்லாந்தரின் படையெடுப்பு

போர்த்துக்கேயர் கட்டிய இந்தக் கோட்டை பின்னர் டச்சுக்காரர் எனப்படும் ஒல்லாந்தரின் படையெடுப்பின் போது, போர்த்துக்கேயர் பலர் கோட்டைக்குள்ளேயே உயிரை பலி கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

1658 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் திகதி போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டையை ஒல்லாந்தர் கைப்பற்றினர். ஒல்லாந்தரின் கோட்டை முற்றுகை உலக வரலாற்றிலேயே படுபயங்கரமான, மிக மோசமான முற்றுகையாக இடம் பெற்றுவிட்டது.

(தொடரும்)

---



## மில்லரின் நினைவாக........

## 5 - 7 - 1987 இரவில்...

காறறு வீச மறந்தது ஓர் கணம்
ககனப் பெருவெளி மின்னிச் சிலிர்த்தது......
ஓசை ஒலிகள் ஒடுங்கிக் கிடந்தன
உலகம் விழித்தது... இருளும் தொலைந்தது......
மறுகணம் -
ஓங்கி எழுந்த ஓசையில் குளித்த
காற்றும், ககனமும் கனத்த இருளும்
வேற்று மொழி முகாம் தகர்ந்தது
இங்கு -
விடுதலை ... விடுதலை ... என்றே முழங்கின.

● ● ●

நெல்லி யடியில் நிகழ்ந்தது ஆயினும்
புல்லர் இருக்குமிடமெலாம் அதிர்ந்தது
கற்கள் சிதறிக் கவிதை படைத்தன......
அற்பர் ஆணவம் அடங்கிச் சரிந்தது.

● ● ●

விடுதலை வேள்வியில் ஆகுதியானதோர்.
வீரனின் பெயர் ஒரு காவியமானது......
கொடுமதி யுடையவர் ஆட்சி பொடிபட
குமுறிச் சினந்தவன் காவியமாகினான்.

● ● ●

மறுநாள் ...
காற்றில் கலந்தனன் மில்லர் என்றனர்
கனலாய் ஒளிர்ந்தவன் மில்லர் என்றனர்
நேற்றுப் பொடியாய் போன முகாமில்
நிறைந்து நிற்கிறான் மில்லர் என்றனர்
ஊற்றாய் பெருகும் வீரமாய் எங்கணும்
உணர்வாய் உயிர்த்தனன் மில்லர் என்றனர்.

● ● ●

எங்களின் மில்லர் எங்கே போயினன்?
எங்களின் மில்லர் எங்கே போயினன்?
காற்றிலே கலந்தனன் ...
காட்டிலே உறைந்தனன் ...
ஊற்றென பெருகிடும்
விடுதலை உணர்விலே ...
வேட்டொலி கேட்கும் ...
வீர எம் மண்ணிலே ...
பாட்டிலே பகைவரின்
பாசறைத் தகர்ப்பிலே ...
தாயக விடுதலைத்
தாகமாம் தவிப்புடன்
இன்னமும் உயிர்க்கிறான்
இன்னமும் வாழ்கிறான். ●

Registered as a News at Paper the G. P. O.

ஈழநாதம்

# 4 செஞ்சிலுவைச் சங்கக்கிளைகள் தனித்தியங்கத் தீர்மானம்?

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள செஞ்சிலுவைச்சங்கக் கிளைகள் எதுவித வாகனவசதியும்அற்ற நிலையில் பெரும் அவதியுறுகின்றன.

வடமாகாணத்தில் ஐந்து கிளைகளைக்கொண்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையைத்தவிர்ந்த ஏனைய நான்கு கிளைகளும் தற்போது தத்தமது வரையறுக்கப்பட்டபகுதிகளிலேயே தன்னிச்சையாக இயங்கத் தீர்மானித்துள்ளன. முன்பும் இந்த நான்கு கிளைகளும் இருந்த போதிலும் யாழ்ப்பாணக் கிளையே வடமாகாணத்தின் அனைத்துச் சேவைகளையும் சுவீகாரம் செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கு முன்னோடியாக வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு கிளைகளும் தமக்கு நிதிசேகரிக்கு முகமாக பொதுமக்களிடமிருந்து பணம் பெற்று வருகின்றன. இக்கிளைகளுக்கு கொழும்பு செஞ்சிலுவைச் சங்கத்தில் இருந்து எதுவித நிதியும் இன்றுவரை வழங்கப்படாதிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நான்கு கிளைகளுக்குமான வாகன வசதிகளையும் பொறுத்தவரையில் யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்க கிளைக்குத் தேவைக்கு அதிகமான வாகன வசதி இருக்கின்றது. ஆனால் மிகமுக்கியமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய கிளைகளுக்கு எதுவித வாகனங்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## இத்தாலியா 90 இறுதியாட்டம் இன்று

உதைபந்தாட்ட ரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இறுதிப்போட்டி இன்று நடைபெறப்போகிறது. ஒரு மாதகாலமாக பல தடைகளைத் தாண்டி ஆர்ஜென்டீனாவும் மே. ஜேர்மனியும் இறுதிப் பந்தயத்துக்குத் தகுதி பெற்றுள்ளன. 1930 இல் முதன் முதலாக உலகக் கிண்ணப் போட்டிகள்ஆரம்பித்த போது இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற பெருமையைக் கொண்டது ஆர்ஜென்டீனா. இவ்வாட்டத்தில் உருகுவேயிடம் தோல்வி கண்டபோதும்1978, 1986 போட்டிகளில் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டவர்கள் இன்று மூன்றாவது முறை கிண்ணத்தை வெற்றி கொள்ளத்திடசங்கற்பத்துடன் நிற்கின்றனர். இதேவேளை மே. ஜேர்மனி 1954, 1966, 1974, 1982, 1986 என ஐந்து முறை இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்று 54இலும் 74இலும்கிண்ணத்தை வென்றவர்கள். இவர்களின் இன்னொரு சிறப்பு இம்முறை மூன்றாவது முறையாகத் தொடர்ந்து இறுதிப் போட்டிக்கு வந்திருப்பதாகும்.

1986இல் மெக்சிக்கோவில் மோதியஅதே அணிகள்இன்று பதினான்காவது உலகக் கிண்ணத்தை வெல்லஇத்தாலியின் ரோமா புரியில் அணிவகுத்து நிற்கின்றன. அன்று3-2என்ற கோல் வித்தியாசத்தில் ஆர்ஜென்டீனா வெற்றிகண்டது. இன்று ஆர்ஜென்டீனா வெற்றி கண்டால் ஐரோப்பாவில் கிண்ணத்தை வென்ற இரண்டாவது நாடாக பிரேசிலுக்கு அடுத்தபடி நிற்பார்கள். அதேவேளை யார்வென்றாலும் உலகக் கிண்ணத்தை மூன்றாவது முறை வென்றவராக பிரேசில் இத்தாலியுடன் மூன்றாவதுநாடாகஇணைந்து கொள்வார்கள். மேலும் இம்முறை எந்த அணி வென்றாலும் கிண்ணம் அவர்களுக்கே சொந்தமாகி விடும். பலவித ஒற்றுமைகளுடன் எதிர்எதிராக நிற்கும் இவ்விரு அணியினருடன் யாரை வெற்றித் தேவதை அணைத்துக் கொள்ளப் போகிறாளோ?

## கலந்துரையாடல்

தற்போதுள்ள நெருக்கடியான சூழ்நிலையை சமாளிக்கும் விதத்தில் பயிர் செய்கை முறையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் சிரேஷ்ட உதவி ஆணையாளர் ஆ. சிவசுவாமி தலைமையில் எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை நல்லூர் கமநலச் சேவைகள் நிலையத்தில் காலை 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது. சகல பெரும்பாக உத்தியோகத்தர்களும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## இன்னும் ஜூன் மாதத்துக்கான சம்பளம் வழங்கப்படவில்லை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் அரச திணைக்கள ஊழியர்களுக்கு இதுவரை ஜூன்மாதச் சம்பளம் கிடைக்கவில்லை

யாழ். உள்நாட்டு இறைவரித்திணைக்களம், யாழ். விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், யாழ். மதுவரித்திணைக்களம் யாழ். சுங்க இலாகா, கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை ஆகிய அலுவலகங்களுக்கும் கொழும்பில் இருந்து சம்பளப்பட்டியல்கள் தயார்செய்து அனுப்பப்படுவதால் திணைக்களங்களுக்கு எதுவித கொடுப்பனவுகளும் இன்றுவரை வழங்கப்படவில்லை.

வடக்கு கிழக்கு மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கும் இதேநிலை. சிலதிணைக்களங்களி ல்முற்பணமாக ரூபா 1000 மும் யாழ். அரச அதிபர் மூலம்பெற திணைக்கள அதிகாரிகள் முயற்சிசெய்து வருகின்றனர். (24)

## சென்னையில் இலங்கைத் தமிழர் ஐவர் கொள்ளை தொடர்பாக கைது

### 8லட்ச ரூபாவிற்கு மேற்பட்ட பொருட்கள் மீட்பு

(சென்னை)

சென்னையில் கொள்ளை முயற்சிகளில் ஈடுபட்டு வந்த ஐந்து இலங்கைத் தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்ணா மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும், சென்னை புறநகர்ப் பகுதியிலும் நடந்துள்ள பல்வேறு சங்கிலி பறிப்புக் கொள்ளைகள் தொடர்பாக இலங்கைத் தமிழ் இளைஞர்களான ரவி, தயா, விஜய், அழகராஜ், கரி ஆகியோர் கைதாகியுள்ளனர்.

இவர்கள் கொடுத்த தகவலின் பேரில் பொலிசார் எட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியான பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர். இக் கொள்ளையர் பொதுமக்களின் வீடுகளில் புகுந்தும், மோட்டார் சைக்கிள்களில் வந்தும், சங்கிலி பறிப்பு போன்றவற்றில் ஈடுபட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 4 கார்கள், 8 மோட்டார் சைக்கிள்கள் 3 லட்சம் பெறும்தியான நகைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. சங்கிலிப் பறிப்புக் கொள்ளைகள் தொடர்பாக 30க்கு மேற்பட்ட வழக்குகளில் இவர்கள் தொடர்புபட்டுள்ளதாகப் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

## மாகாண சபை-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாவை சிறிலங்காஅரசு நிறைவேற்றி மாகாண சபையைக் கலைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டதற்காக சிறிலங்கா அரசைக் கண்டித்து ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று புதுடில்லியில்ஓர்அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையை இந்திய வானொலி ஒலிபரப்பியது.

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் யுத்தத்தின் ''உண்மை நிலை'' பற்றி ''சார்க்'' நாடுகளுக்கு எடுத்துக் கூறுவதற்காகப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தூதுக்குழு ஒன்றை அனுப்புவதற்கு அரசு தீர்மானித்திருந்தது. இந்தக் குழுவில் அங்கம் வகிப்பதற்கு ஈ. பி. ஆர். எல். எவ்வும் ஒப்புக்கொண்டிருந்தது. மாகாணசபை மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, ''வடக்குக் கிழக்கில் அப்பாவித்தமிழ் மக்கள்கொல்லப்படும்போது சார்க் நாடுகளுக்கு நாங்களும் தூதுக்குழுவில் செல்வது அதை நியாயப்படுத்துவதாக முடியும்'' என்று கூறி குழுவில் செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளது.

## ஊழியர்களை சமுகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபையைச்சேர்ந்த சகல நிரந்தர உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும் நாளை 9ஆம் திகதி திங்கட்கிழமை காலையில் அவர்கள் வேலை செய்த சாலைகளில் சமுகமளிக்குமாறு வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் தலைவர் திரு சி. கனகரத்தினம் வேண்டுகோள்விடுத்துள்ளார். (மு)

## தமிழரை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிவாரணங்களோ வழங்கப்படவில்லை. தமிழீழத்திற்குவரும் உணவுப் பொருட்களையும், எரிபொருட்களையும் சிங்கள அரசு தடைசெய்து வருகிறது. உலக அமைப்புகள் தமிழீழ மக்களுக்காக வழங்கி வரும் நிவாரணங்கள் எதுவும் அவர்களுக்கு வந்து சேருவதில்லை.

ஜே. வி. பியினரை அழிக்கிறோம் என்ற பெயரில் சிங்கள அரசு பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களைக் கொன்று குவித்ததை உலகம் அறியும். இன்று விடுதலைப் புலிகளை அழிக்கிறோம் என்ற பெயரில் தமிழ்பேசும் மக்களை கிழக்கு மாகாணத்தைவிட்டே அழித்தொழிக்கும்நோக்குடன் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது.

கிழக்கு மாகாணத்தில்தமிழ் பேசும் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் ஸ்ரீலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டு, வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

மேலும் 10.06.90 அன்று சிங்கள அரசுடன் போர் தொடங்கியதில் இருந்து இன்றுவரை 144 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். அவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி முகாம்களுக்கு ஒருவார உணவுப் பத்திரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அகதி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு ஒருவார உலர் உணவு வழங்குவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சிலருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளைதெரிவித்தார்.

காந்தி சேவா சங்கம், குருகுலம், கிளிநொச்சி மகாவித்தியாலயம், கனகபுரம் வித்தியாலயம், நவஜீவனம் ஆகிய அகதிமுகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கே உலர் உணவுக்கான பர்மிட்டுகள் வழங்கப்படவுள்ளன.

வேறு சில முகாம்களிலும் அகதிகள் தங்கியிருப்பதாகவும், அவர்களின் பெயர்ப்பட்டியல்கள், கிராம சேவகர்கள் மூலமாகச் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவை அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரின் அனுமதி பெற்றவுடன் அவர்களுக்கும் பர்மிட் வழங்கப்படுமெனவும் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (49)

## அல்லலுற்று வரும் அகதிகளுக்கு துன்பம் தரும் பணிப்புக்கள்

(முல்லைத்தீவு)

அடிபாடுகளுக்கு மத்தியில் பல உயிர் இழப்புகளுக்குப் பின் சிங்கள இராணுவம் பொதுமக்களைக் கவசமாகக் கொண்டு கிழக்குக் கரையோரமாக முன்னேற முயற்சித்த போது, சிதறியோடிய மக்கள் காடுகரம்பை என்று நடையாக கொக்கிளாய், நாயாறு, செம்மலைக்கு வந்துள்ளனர்.

இவர்கள் வந்ததும் வராததுமாக தொடர்ந்தும் நடக்க முடியாத அகதிகளை, நடையாகவே வேறிடங்களுக்குச் செல்லுங்கள் என்று அதிகாரிகள் பணிப்பதாகத் தெரிகின்றது.

## அகதிநிவாரணம்; சிற்றூர் அவை ஊடாகவே நடக்க வேண்டும்

(புங்குடுதீவு)

அகதிகள் புனர்வாழ்வு நிவாரண நிதி சேகரிப்பு சம்பந்தமான நடவடிக்கைகள் யாவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சிற்றூர் அவைகளின் ஊடாகவே மேற்

தப் பிரதேசப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (22)

## ஒரு படகு சேவை மட்டுமே!

(புங்குடுதீவு)

குறிகாட்டுவான்-நயினாதீவு படகுச்சேவை மட்டுப்படுத்தப்

## இடம்மாற்றம்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை

## சேவை செய்ய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால போர் நிகழ்

## அரசாங்க அதிபர் கலந்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அகதி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு ஒருவார உலர் உணவு வழங்குவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சிலருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளைதெரிவித்தார்.

காந்தி சேவா சங்கம், குருகுலம், கிளிநொச்சி மகாவித்தியாலயம், கனகபுரம் வித்தியாலயம், நவஜீவனம் ஆகிய அகதிமுகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கே உலர் உணவுக்கான பர்மிட்டுகள் வழங்கப்படவுள்ளன.

வேறு சில முகாம்களிலும் அகதிகள் தங்கியிருப்பதாகவும், அவர்களின் பெயர்ப்பட்டியல்கள், கிராம சேவகர்கள் மூலமாகச் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவை அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரின் அனுமதி பெற்றவுடன் அவர்களுக்கும் பர்மிட் வழங்கப்படுமெனவும் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (49)

## சேவை செய்ய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால போர் நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட அனைவரது துன்பங்களை நீக்கும் முகமாக அனைத்து அங்கத்தவர்களும் தங்களால் ஆன சேவையை ஆற்ற வேண்டும் என மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குனர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தின் அடாவடித்தனங்களால் பெருந்தொகை மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதையிட்டு கண்டனம் தெரிவித்துமுள்ளார்.

## இடம்மாற்றம்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம் கடந்த வாரம் நடைபெற்ற ஹெலி, பொம்மர், வான் தாக்குதலில் சேதமடைந்ததை அடுத்து துர்க்காபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

### பழைய வேட்டிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. உதவ முன்வருவோர் அரியாலை றேடியன்ற் கல்வி நிலையத்தில் அன்பளிப்புப் பொருட்களை ஒப்படைக்கும் வண்ணம் கேட்கப்படுகின்றார்கள். (11)

## துன்பம் தரும் பணிப்புக்கள்

(முல்லைத்தீவு)

அடிபாடுகளுக்கு மத்தியில் பல உயிர் இழப்புகளுக்குப் பின் சிங்கள இராணுவம் பொதுமக்களைக் கவசமாகக் கொண்டு கிழக்குக் கரையோரமாக முன்னேற முயற்சித்த போது, சிதறியோடிய மக்கள் காடுகரம்பை என்று நடையாக கொக்கிளாய், நாயாறு, செம்மலைக்கு வந்துள்ளனர்.

இவர்கள் வந்ததும்வராததுமாக தொடர்ந்தும் நடக்க முடியாத அகதிகளை, நடையாகவே வேறிடங்களுக்குச் செல்லுங்கள் என்று அதிகாரிகள் பணிப்பதாகத் தெரிகின்றது.

## ஒரு படகு சேவை மட்டுமே!

(புங்குடுதீவு)

குறிகாட்டுவான்–நயினாதீவு படகுச்சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தினமும் ஒரு படகுமட்டுமே இச்சேவையில் ஈடுபட்டுவருகின்றது.

காலை எட்டுமணி அளவில் நயினாதீவு துறையிலிருந்து குறிகாட்டுவானுக்குவரும் இப்படகு பிற்பகல் இரண்டுமணிக்கு குறிகாட்டுவான் துறையிலிருந்து நயினாதீவுக்குச் செல்கின்றது.

தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடே இதற்குக் காரணமாகும். மேற்படி சேவையிலீடுபடும் படகுகளுக்குத் தேவையான டீசலை புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அடிப்படையில் நாள் ஒன்றிற்கு ஒருபடகிற்கு ஐந்து லீற்றர் வீதம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (22)

### மின்சார

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தவா? என்று இப்பகுதி மக்கள் வினவுகிறார்கள். அவசர காரியமாகக் கொழும்புக்குச் சென்று அங்கு அகப்பட்டுக்கொண்டவர்களில் சுமார் 200 பேர் கடந்தவாரம் இங்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். அதுவும் இராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோ கரிபுலேந்திரனை இவர்கள் சந்தித்து தங்கள் நிலையை எடுத்துக்கூறி நெருக்குதல் கொடுத்ததன் பேரில் மதவாச்சியிலும் பூனாவ என்ற இடத்திலும் சிங்க[illegible] குண்டர்களின் கடுமை[illegible] தாக்குதலுடன் இ[illegible]து சேர்ந்தார்கள். வ[illegible]னியா வரை மட்டுமே [illegible]ர்களுக்கு வாகனவசதி [illegible]ங்கப்பட்டது.

[illegible]னுமொரு தொகுதி வடபகுதி மக்களை நேற்று சனிக்கிழமை அனுப்பிவைப்பதாக வாக்குறுதி அளித்துவிட்டு இறுதி நேரத்தில் இவர்களில் யாழ்ப்பாணத்தவர்களை வவுனியாவரைகூட கொண்டுவர முடியாது என்று மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இதனால் இவர்களை அரசு பணயக்கைதிகளாக பயன்படுத்த இருக்கிறதா என்று இங்குள்ள இவர்களின் உறவினர்கள் அஞ்சுகிறார்கள். (75)

## அகதிநிவாரணம்; சிற்றூர் அவை ஊடாகவே நடக்க வேண்டும்

(புங்குடுதீவு)

அகதிகள் புனர்வாழ்வு நிவாரண நிதி சேகரிப்பு சம்பந்தமான நடவடிக்கைகள் யாவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சிற்றூர் அவைகளின் ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டுமென விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் புலிகளின் குரல் செய்தி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி நிதி சேகரிப்பில் இதுவரை ஈடுபட்ட பொது ஸ்தாபனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களை அந்தந்தப் பிரதேசப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (22)

## பயிலுனர் ஆசிரியர்களுக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ளசகலபயிலுனர் ஆசிரியர்களும் இன்று காலை 9 மணியளவில் நல்லூர் இந்து வித்தியாலயத்தில் தவறாது சமுகமளிக்கும்படி யாழ். பயிலுனர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### மக்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவ்வறிக்கையில், அப்பாவிப் பொதுமக்கள் மீதுதிட்டமிடப்பட்ட முறையில் திணிக்கப்பட்டிருக்கும் இத்தகையஇரக்கமற்றசெயல்கள் இன ஒழிப்பு முறையாக அமைவதோடு, இத்தகைய செயல்களை எவ்வகையிலும் யாராலும் நியாயப்படுத்த முடியாது. பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்ட இதே வேளையில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் பொருளாதார தடையானது அப்பாவிப் பொது மக்களின் பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டிய அவல நிலையை உருவாக்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலை பொதுமக்களின் அவஸ்தையை அதிகரிக்குமேயன்றி பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என்ற உண்மையை அரசாங்கம் உணர்ந்து கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொள்ளாது எல்லாப் பிரச்சினைகளுக்கும் நியாயபூர்வமான முறையில் தீர்வைகாண்பதே சிறந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ளில் புகுந்தும், மோட்டார் சைக்கிள்களில் வந்தும், சங்கிலி பறிப்பு போன்றவற்றில் ஈடுபட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 4 கார்கள், 8 மோட்டார் சைக்கிள்கள் 3 லட்சம் பெறுமதியான நகைகள் ஆகியவை கைப்பற்

## அரசாங்க அதிபர் கலந்து கொள்ளவில்லை!

(யாழ்ப்பாணம்)

''அகதிகள் அதிகரிப்பால் யாழ். மாவட்டத்தில் உணவுக்குப்பெருந்தட்டுப்பாடு'' என்ற தலைப்பில் கடந்த ஐந்தாம் திகதி 'ஈழநாதம்' கடைசிப்பக்கத்தில் வெளிவந்த செய்தியில் யாழ். மாவட்ட அரச அதிபர் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார் என்று வெளிவந்திருந்தது. இதில் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கலந்துகொள்ளவில்லை என்பதே சரியானதாகும்.

### படையின

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாய் பெறுமதியான மருந்து வகைகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இம் மருந்து வகைகளை கால தாமதமின்றி சகலமுகாம்களுக்கும் அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை தமிழர் பிரதேசங்களில் மருந்து பற்றாக்குறை இல்லையென தமிழீழ விடுதலைப் புலிகள் கூறியுள்ளதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### ஏமாற்றுவது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஜேரத்தினா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வடக்கு கிழக்கு மாகாணசபை மசோதாமீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை இந்திய அமைதிப்படையினர் நான்கு தடவைகள் கைது செய்தார்கள் என்றும் அவரைக் கைது செய்ய இந்தியப்படை விரும்பவில்லையென்றும் ரஞ்சன் விஜேரத்தினா மேலும் சொன்னார்.

விடுதலைப்புலிகள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டு விடுவார்களென்றும் ரஞ்சன் விஜேரத்தினா கூறினார்.

சார்க் நாடுகளுக்கு எடுத்துக் கூறுவதற்காகப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தூதுக்குழு ஒன்றை அனுப்புவதற்கு அரசு தீர்மானித்திருந்தது. இந்தக் குழுவில் அங்கம் வகிப்பதற்கு ஈ. பி. ஆர். எல். எவ்வும் ஒப்புக்கொண்டிருந்தது. மாகாணசபை மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, ''வடக்குக் கிழக்கில் அப்பாவித்தமிழ் மக்கள்கொல்லப்படும்போது சார்க் நாடுகளுக்கு நாங்களும் தூதுக் குழுவில் செல்வது அதை நியாயப்படுத்துவதாக முடியும்'' என்று கூறி குழுவில் செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளது.

### பெண் கைது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவிசெய்தார் என்று கூறியே இராணுவத்தினரால் இப் பெண்மணி கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் இவரைப்பற்றிய எதுவிததகவலும் இதுவரை இல்லை என்றும் கூறப்படுகின்றது.

### முல்லைத்தீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மில் இருந்து நகரை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தஷெல் தாக்குதலினால் நான்கு கடைகள் சேதமடைந்தன இரண்டு கடைகள் தீப்பற்றிக் கொண்டன. அத்தோடு பென்ரிக்கோஸ் தேவாலயம் முற்றாகச் சேதமடைந்தது. இத் தாக்குதலினால் சந்திரன் (22) என்னும் பொதுமகன் காயமடைந்தார்.

களை அழிக்கிறோம் என்ற பெயரில் தமிழ்பேசும் மக்களை கிழக்கு மாகாணத்தைவிட்டே அழித்தொழிக்கும்நோக்குடன் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது.

கிழக்கு மாகாணத்தில்தமிழ் பேசும் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் ஸ்ரீலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டு, வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

மேலும் 10.06.90 அன்று சிங்கள அரசுடன் போர் தொடங்கியதில் இருந்து இன்றுவரை 144 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். அவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அகதிகளுக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வைத்தியர்களுக்கான மருந்துவகைகள் வாகனவசதிகள் என்பவற்றை யாழ் மாவட்ட சுகாதார அத்தியட்சகர் ஏற்பாடு செய்துள்ளார்.

இந்த ஏற்பாட்டின் மூலம் தாளையடி செம்பியன் பற்று இடம் பெயர்ந்த மக்களுக்கான அத்தியாவசிய, அவசர மருந்து வகைகளை வழங்கக் கூடியதாக இருக்கும் என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். (லோ)

### இராணுவம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் இராணுவத்தினர் முகாம் நோக்கித் திரும்பினர்.

அதேவேளை நேற்றுக் காலை கிளிநொச்சி நகரப் பகுதியில் பொம்மர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. சேதவிபரங்கள் தெரியவரவில்லை.


## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ஆசிரியர்களுக்கான

## பொதுக் கூட்டம்

'' யூனிவேர்சல் '' நிறுவன ஆசிரியர்களுக்கான பொதுக் கூட்டம் 10.07.90 (செவ்வாய்) பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சகல ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்கவும்.

(B 1231) அதிபர்.



## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ் மாவட்டம்

## செயற்குழுக் கூட்டம்

இடம்: கீன் சென்ரர், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

காலம்: 10.07.90 செவ்வாய் காலை 9 மணி

செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்பிதழ்கள் வழங்க முடியாமைக்குவருந்துகிறோம்.

(B/1232)


## மரண அறிவித்தல்

### திருமதி சிற்றம்பலம் செல்லம்மா

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, திருமதி சிற்றம்பலம் செல்லம்மா நேற்று காலமாகி விட்டார். இவர் சிற்றம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், சிவநாயகம் (கனடா), சிவஞானேஸ்வரி, சிவஞானபூபதி, சிவஞானரஞ்சிதம், சிவசக்தி ஆகியோரின் அன்புத்தாயாரும், தம்பாப்பிள்ளை, இராசரத்தினம், அப்புக்கண்டு, சிவசோதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சின்னத்துரை (சிங்கப்பூர்), ஆசைப்பிள்ளை, கதிரித்தம்பி, தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஜெயகணேசன் (கனடா) ஜெயவர்த்தனி (யாழ் இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமை அம்மம்மாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 2 மணி அளவில் விலங்கன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். தயவுசெய்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன்.

தகவல்: க. கதிரித்தம்பி

(R/507)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.